REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 25உ புதன் (10—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 26உ வியாழன் (11—11—54) [இதழ் 128

## ஜப்பானிய அரிசியில் மின்கதிர் இயக்கம்!

வயலிலே புதிதாக விளைந்துவரும் நெற்பயிரில் மின்கதிரியக்கம் கொண்ட மழை பெய்தமையால், அவற்றில் விளைந்து கிடைக்கும் அரிசியையும் கெடுத்திருக்கக்கூடும் என்று ஜப்பானிய பேராசிரியர் ஒருவர் கூறுகிறார்.

இந்த பயிர்கள் விளைந்துள்ள இடம், டோகோ என்ற தீவில் உள்ள சோச்சி என்ற பிரதேசமாகும்.

சோச்சி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரான சகாபி, அண்மையில் ரஷ்யர்கள் பரிசோதித்துப் பார்த்த நீர்வளிக் குண்டுகளின் பயனாய் அரிசியிலும் மின்கதிரியக்கம் புகுந்துவிட்டதாகக் கூறுவதாக, இங்குள்ள பல பத்திரிக்கைகள் கூறுகின்றன

# தடுப்புக் காவல் சட்டம் நீடிக்கப்படும்?

## காங்கிரஸ் ஆட்சியினரின் ஏகாதிபத்ய உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு

## எதிர்க் கட்சிகளை ஒடுக்கும் சட்டம் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்படுகிறது

### ஏழாண்டு குழந்தை ஜனநாயகத்தை சிதைக்கும் போக்கு!

*அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் சட்டம் கொண்டுவரப்படும்?*

இந்தியாவின் ஆட்சி பீடத்தில் சென்ற ஏழாண்டுகாலமாக அமர்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்திவரும் காங்கிரஸ் சர்க்கார் தனது ஆதிக்கத்தை நீடித்துக்கொள்ள பலப்பல சட்டங்களை அடிக்கடி இயற்றி வருகிறது.

நாட்டிலே எதிர்க் கட்சிகள் தோன்றுது செய்யவும், சட்டபூர்வமான முறைகளுக்கு உட்பட்டு அமைதியுடனும், ஜனநாயக முறையிலும் போராடும் எதிர்க் கட்சியினரை அடக்கவும் காங்கிரஸ் சர்க்கார், மத்திய ஆட்சியின் பெயராலும், மாநில சர்க்கார்களின் பெயராலும் ஏராளமான பாதுகாப்புச்சட்டங்களை நிறைவேற்றி வைத்துக்கொண்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

காங்கிரஸ் கட்சியின் ஏகாதிபத்திய மனப்பான்மைக்கு ஆதரவு அளிப்பதும், எதிர்க் கட்சிகளின் நியாயமான கோரிக்கைகளை மறுக்கவும், பதவி பீடம் ஆடாது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் காங்கிரஸ் சர்க்கார் தீட்டியுள்ள சட்டங்களில் தலையாய தன்மையுடையது, 'தடுப்புக் காவல் சட்ட'மாகும்.

*எதிர்க் கட்சியினரை ஒடுக்கக் காங்கிரஸ் ஆட்சியாளரின் கையிலே உள்ள 'தடுப்புக் காவல் சட்ட'மென்னும் இக்கொடிய ஆயுதத்தின் ஆயுள் இந்த ஆண்டு டிசம்பர் 31-ந் தேதியுடன் முடிவடைகிறதாம்.*

மேலும் தங்களது நிலையை உறுதிப்படுத்தவும், அடக்கு முறையை எதிர்க் கட்சியினர் மீது விச தங்களுக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும், தடுப்புக் காவல் சட்டத்தை டில்லியில் ஆட்சி புரியும் காங்கிரஸ் சர்க்கார் மேலும் இரண்டாண்டு காலத்திற்கு நீடிக்கச் செய்யப்போகிறதாம்!

அடுத்து நடைபெற இருக்கும் இந்தியப் பாராளுமன்றக் கூட்டத்தில், தடுப்புக் காவல் சட்ட நீடிப்புக்கான மசோதா கொண்டுவரப்படுமாம்!

*'தடுப்புக் காவல் சட்டம்' என்பது, கொடிய அடக்குமுறைச் சட்டங்களில் முக்கியமான ஒன்று எனவும், அது, ஆள் தூக்கிச் சட்டம் போன்ற ஒன்று எனவும், ஜனநாயக நாட்டில் காணப்படக்கூடாத ஒரு சட்டமெனவும் எடுத்துக்காட்டி பலர் இச்சட்டத்தை எதிர்த்து வந்தனர்.*

தடுப்புக் காவல் சட்டம் முதன் முதலாக நிறைவேற்றப்பட்டபோதும், பின்னர் அது நீடிக்கப்பட்டபோதும், 'நாட்டின் அமைதியைக் காக்கவே இதுபோன்ற சட்டங்கள் நிறைவேற்றப்படுவதாகவும், எதிர்க் கட்சியினரின் வலிவை ஒடுக்க இச்சட்டம் பயன்படுத்தப்படும் என்று கூறுவது தவறு', என்றும் ஆட்சியாளரின் சார்பில் அவ்வப்பொழுது கூறப்பட்டது.

*நடைமுறையிலோ, தடுப்புக் காவல் சட்டம் காங்கிரஸ் சர்க்காரின் ஆதிக்க நீடிப்புக்கு உதவும் கருவி என்பதும், எதிர்க் கட்சிகளை ஒடுக்கவே அது பயன்பட்டது என்பதையும் பொதுமக்கள் அறிவார்கள்.*

## இலங்கை இந்தியர் நிலை

### தினசரி 50 பேர் வெளியேறுகின்றனர்!

இலங்கையில் தற்காலிகமாக வாழும் அனுமதி பெற்ற இந்தியர்கள், அனுமதி காலம் முடிவுற்றதினால், தினம் 50 பேர்களாக இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர் என்று இறுதியாகக் கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் எல்லாம் ஏற்கனவே, 'வெளியேறுங்கள்' என்று 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்ட 5,000 பேர்களில் உள்ளடங்கியவர்களாம்.

பெரும்பாலானோர் இலங்கையிலிருந்து தங்கள் சொத்துக்களை எடுத்துக் கொண்டு செல்லும் பொருட்டு, தாங்களாகவே வெளியேறி விடுகிறோம் என்று கூறுகின்றனராம்.

இலங்கையின் வடக்குக் கடற்கரையில், வெளியேறுகிற இந்தியர்கள் திரும்பவும் கள்ளத்தனமாக இலங்கையினுள் புகுந்து விடாமலிருக்கும் பொருட்டு பலத்த கட்டுப்பாட்டுடன் கூடிய காவல் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

## இலங்கை ஒப்பந்தம்

### ஆலோசனைக் குழு நியமனம்

இலங்கை சர்க்கார் புதுடில்லி ஒப்பந்தமான இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்ய தமக்கு ஆலோசனை கூற குழு ஒன்றை நியமிப்பது என முடிவு செய்துள்ளனர்.

இக்குழுவில், முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, நிதி அமைச்சர் ஈ. பி. ஈ. விக்ரமசிங்கா, கல்வி அமைச்சர் எம். டி. பந்தா, வர்த்தக இலாகா அமைச்சர் வி. நல்லையா, தொழில் இலாகாவைச் சேர்ந்த பி. எப். ஜெயவர்த்தனா ஆகியோர் உறுப்பினர்களாவார்கள் என்று தெரிகிறது.

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை உலக சுற்றுப்பிரயாணத்திற்குப் புறப்படுமுன் கூடிய இலங்கை மந்திரி சபைக் கூட்டத்தில் மேற்படி முடிவு செய்யப்பட்டது.

## குஜராத்தில் இந்திக்கு எதிர்ப்பு வளருகிறது!

### சௌராஷ்டிரத்திலும் அதே நிலை!

"இந்தி, தேசீய மொழி என்று எழுதி வைக்கப்பட்டுவிட்டதினால் அதனைப் பரப்புவதற்கு, கையில் கோல் ஒன்றுடன் பிரசார வேலையில் இறங்க வேண்டுமென்று பொருள் இல்லை,"

என்று பாராளுமன்ற உறுப்பினரான பண்டிட் பாலகிருஷ்ண சர்மா என்பவர் கூறியுள்ளார்.

இவர், இந்தியில் ஒரு எழுத்தாளர் என்று கூறப்படுகிறது.

"விரும்பாதவர்களின் தலையில் இந்தியைத் திணிக்க முயற்சிப்போர், இப்பணிக்கு ஆவன செய்கிறார்கள் என்று கூறுவது இயலாது,"

என்று அவர் மேலும் கூறினார்.

உத்திரப் பிரதேச இந்தி சம்மேளனத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"குஜராத், மகாராஷ்டிரம் போன்ற பகுதிகளில், இந்தி மொழியின் மீது இப்போது வெறுப்பு ஏற்பட்டுள்ளது; இங்குள்ள மக்கள், சில காலத்திற்கு முன்பு வரை இந்தி மொழியின் மீது அன்பு கொண்டிருந்தார்கள்; இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம், இந்தி மொழியைப் பரப்ப எடுக்கப்பட்ட தவறான நடவடிக்கைகளேயாகும்,"

என்று சர்மா மேலும் கூறியுள்ளார்.

"இந்தி ஆதரவாளரிடையே காணப்படும் அளவுக்கு மீறிய ஆர்வம், பிரதேச மொழிகள் பிரச்சினையில் பலருடன் மோதுதல் ஏற்படுமாறு செய்கிறது,"

என்று அவர் மேலும் கூறினார்.

"இந்தி அன்பர்கள் தூய்மையுடன், பண்புடன் பிரச்சினையை அணுக வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## காங்கிரஸ் தலைமைப் பதவி

### பொறுப்பேற்க தேபார் ஒப்பம்

*சௌராஷ்டிர முதன் மந்திரியாயிருந்தவர்*

சௌராஷ்டிர முதன் மந்திரியான யு. என். தேபார் என்பவரை, அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு, காங்கிரசின் தலைவராக சிபாரிசு செய்துள்ளதல்லவா? தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள, தாம் சித்தமாயிருப்பதாக அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

அவர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றின் சாராம்சமாவது :—

"பண்டித நேருவும், இதர செயற்குழு உறுப்பினர்களும் என் மீது கொண்டுள்ள அன்பையும், நம்பிக்கையையும் காண நான் பெரு மகிழ்வெய்தினேன். அதே சமயத்தில் அவர்கள் செய்துள்ள சிபாரிசில் அடங்கியுள்ள பெரும் பொறுப்பையும் எண்ணிப் பார்த்தேன்.

"சௌராஷ்டிரா, குஜராத் ஆகிய பகுதிகளில், அரசாங்கத்தின் மூலமாயும், வெளியிலும், எனது அன்பிற்குரிய சகாக்களுடன் பணி புரிந்து வந்தேன். அந்த மிகச் சிறிய பிரதேசத்தில் நான் செய்துகொண்டிருக்கிற குறைந்த அளவு வேலைகளிலேயே நான் திருப்தியடைந்து வந்திருக்கிறேன்.

"நான் எனது கடமையை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டுமெனக் கோரப்படுகிறேன். அந்தக் கடமையைச் செய்ய முன்வர ஒத்துக்கொண்டிருக்கிறேன். இது பற்றி, செயற் குழு செய்துள்ள சிபாரிசை இயக்கத்தில் உள்ள இதர தோழர்களும் ஆலோசித்து முடிவு கூறவேண்டுகிறேன்."

★

நவல்ஷங்கர் தேபார், சௌராஷ்டிரத்தில் தேபார்பாய் என்று

(4-ம் பக்கம் பார்க்க)

* * * * * * * * * * * * * * * * * * * *

## நாளை!

சென்னை தோழமைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு நாளை வெளிவரும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## நேருவைச் சந்திக்க முகமது அலி விருப்பம்

### இந்தியா—பாகிஸ்தான் உறவில் திருப்புமுகம்!

காஷ்மீர் பிரச்சினை பற்றியும், கால்வாய்த் தகராறு போன்ற இதர சில பிரச்சினைகள் பற்றியும் இந்தியாவுடன் மீண்டும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்த பாகிஸ்தான் முடிவு செய்துள்ளதாகவும், இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்து இதுபற்றிப் பேசி ஒரு முடிவுகாண, பாகிஸ்தான் பிரதமர் முகமதலி ஆவல் கொண்டுள்ளாரென்றும் தெரியவருகிறது.

இப்பிரச்சினை பற்றி லண்டனில் நடைபெறும் மாநாட்டின்போதோ அதற்கு முன்பாகவோ கலந்து பேச விருப்பம் கொண்டுள்ளதாகவும், இது பற்றி தூது செல்ல, டெல்லியிலிருந்து வரவழைக்கப்பட்ட கஜ்ஜுபர் அலிகான், மீண்டும் டெல்லி செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேரு பண்டிதர், முகமதலிக்குக் கடைசியாக எழுதிய கடிதம் ஒன்றின் மூலம், இதுபற்றிய சமரசப் பேச்சு வார்த்தைகளுக்கு வழி இருப்பதாக அங்குள்ள அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

காஷ்மீர் விவகாரத்தை மீண்டும் ஐ. நா. சபை எடுத்துக் கொள்ளும்படி கோரும் யோசனையையும் பாகிஸ்தான் கைவிட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

சமரசப் பேச்சு வார்த்தைகளுக்காகத் தூது சென்ற கஜ்ஜுபர் அலிகான் மூலம் கிடைக்கும் பதிலைப் பொறுத்தே பாகிஸ்தானின் அடுத்த நடவடிக்கைகள் அமையுமென்று தெரியவருகிறது.

நம் நாடு
ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—11—1954 புதன்

# வெறும் கண்துடைப்பு!

தேவநாகிரி எழுத்தைக் கொண்ட இந்தி மொழியை, இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக, இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு உள்ளது. இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் ஆங்கிலத்தைப் பதினைந்து ஆண்டு காலத்திற்குள்ளாக அகற்றிவிட்டு, அதன் இடத்தை இந்தி நிரப்ப வேண்டும் எனவும், அரசியல் சட்டத்தில் விதி இருக்கிறது.

இந்தியா முழுவதிலும் உள்ள அறமன்றங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும், இந்தி மொழியில் இருப்பதுதான் சாலச் சிறந்தது; அதற்கான முயற்சியை உடனடியாக மேற்கொண்டால்தான், அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட பதினைந்தாண்டு காலத்திற்குள், இந்தி மொழித் திணிப்பு வெற்றி பெறும் என ஆதிக்கபுரியினர் பேசியும் வருகின்றனர். இந்தியா முழுவதிலும் இக்கருத்திற்குக் கணிசமான எதிர்ப்பு இருக்கவும் இருக்கிறது.

இருந்துவரும் ஆங்கிலத்திற்குப் பதிலாக அறமன்றங்களில் இந்தியைப் புகுத்தும் தீவிர முயற்சியை அறிந்தோ அறியாமலோ ஒன்றிரண்டு தமிழ்ப் புலவர்கள், அறமன்றங்களில் இனி தமிழ்தான் அரியாசனம் ஏறும் எனச் செந்தமிழில் இடி முழக்கம் செய்கின்றனர். எந்தச் சான்றைக் கொண்டு, அவர்கள் இந்த முடிவிற்கு வந்தனரோ, யார் கண்டார்கள்? ஏதோ கேட்கும் தமிழர்களின் சிந்தை குளிர்ந்தால் தம்மைப் பாராட்டுவர் என்ற குறைமதியின் கோளாறுதானோ என்னவோ, செந்நாப்புலவர் ஓரிருவர் அவ்வாறு உண்மைக்கு மாறாகப் பேசி வருகின்றனர். ஆனால் ஆதிக்கபுரியினரின் இந்தி வெறி அவர்கள் கூற்றை அடிப்படையற்றதாக ஆக்கிவிடுகிறது.

ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி இடம் பெற வேண்டும் என அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பதினைந்தாண்டு கால அளவில், கிட்டத்தட்ட ஐந்தாண்டு கழிந்துவிட்டது; இன்னும் பத்து ஆண்டுகள்தான் இருக்கின்றன, ஆங்கிலத்தை இந்தி வெளியேற்றுவதற்கு!

செயல்படு வளத்தை வருகிற ஐந்தாண்டுகளுக்குள்ளாக இந்தி மொழிக்கு உண்டாக்கினுல்தான், இறுதி ஐந்தாண்டில் ஆங்கிலத்தையும், இந்தியையும் உடனுடன் வைத்து, முடிவாக 1965—66-ல் ஆங்கிலத்தை அறவே ஒழித்துவிட்டு, இந்தியை மட்டுமே தனித்து நிலைநாட்ட முடியும் என இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் அபுல் கலாம் ஆசாத் ஆவேசத்தோடு பேசியுள்ளார், டெல்லி இந்தி போதனை கழகத்தில். நாட்டின் பல பகுதிகளிலும் கட்டாய இந்தி போதனையைத் தீவிரப்படுத்த வேண்டுமென வும் அமைச்சர் ஆவேசத்துடன் பேசியுள்ளார்.

பஸ்தியில் நடைபெற்ற உத்திர பிரதேச இந்தி சாயித்திய சம்மேளனத்தின் மாநாட்டில் பேசிய மேற்படி மாநில முதலமைச்சர் பண்டிட் கோவிந்த வல்லப பந்தும் இந்தியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறி, அதை வளமுள்ள மொழியாக்குவதற்கான கருத்துக்களையும் கூறியுள்ளார்.

மற்ற மொழிகளுக்கும் தேவநாகரி எழுத்துக்களையே கொள்ள வேண்டும் எனவும், அதனுல், மொழி வழியில் உருவாகக் கூடிய ஒற்றுமை விரைவுபட வழி ஏற்படும் எனவும் பந்த் கூறுகிறுர். அத்துடனும் அவர் நிற்கவில்லை. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மற்ற மொழியினரும், இந்தியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொண்ட விரிவுடை நெஞ்சினருக்கு நன்றியும்தெரிவித்துக் கொள்கிறுர் அந்த அமைச்சர். மற்ற மொழியினரின் தாராள போக்கிற்காக, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் குஜராத்தி, வங்காளி, தமிழ், உருது ஆகிய ஏதாவது ஒரு வட்டார மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் வல்லப பந்த், அறிவுரை கூறுகிறுர். கட்டாயமாகக் கற்க வேண்டும் என அவர் கூறவில்லை; விருப்பப் பாடமாகத்தான் கற்க வேண்டுமென அவர் குறிப்பிட்டிருக்கிறுர்.

உருது மொழியும் இந்தியும் ஒன்றுதான்; ஆனுல் அராபிய-பெர்சிய மொழிச் சொற்களை தமதாக்கிக் கொண்டிருக்கிற ஒரே ஒரு வேற்றுமைதான் உருதுவுக்கும் இந்திக்கும் உண்டு எனவும் அமைச்சர் மொழி ஆராய்ச்சி செய்திருக்கிறுர்.

உத்திர பிரதேசத்தின் தாய் மொழிகளாக இந்தியும், உருதுவும் இருந்து வருகின்றன. உருதுவை ஒழித்துக்கட்ட அங்குள்ள இந்தி வெறியர்கள் மேற்கொண்டுவரும் முயற்சி நாடறிந்ததொன்று. அந்த வெறிச் செயலில் முதலமைச்சர் வல்லப பந்துக்கும் பங்குண்டு. அம்மாநிலத்தில் உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், இந்தி மொழி வெறியின் செயல் குறித்துக் கண்ணீர் வடிப்பதும், இந்தியப் பேரரசின் முதலமைச்சரிடம் காவடி தூக்கியவண்ணம் இருப்பதும் மறந்துவிடக்கூடியது அல்ல.

ஒரு வீட்டில் குடி இருக்கும் ஒரு குடும்பம் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தும், அடுத்த வீட்டில் உள்ள குடும்பம் உருதுவைத் தாய் மொழியாக கொண்டிருந்தும், உருதுவைக் கற்றுக்கொள்ள விரும்பவில்லையானுலும், அதை வெறுத்து ஒழிக்கவாவது முயலாமல் இருக்கவேண்டும் இந்தி வெறியர்கள். ஆனுல், உருதுவின் வளர்ச்சியைத் தடுத்து, அதை மெள்ளச் சாகடிக்கவும இந்தி வெறியர்கள் முயற்சித்து வருகின்றனர். இத்தகைய மொழிவெறி கொண்டவர்களா தங்கள் வளமற்ற மொழிக்கு பலவகையிலும் மாறுபட்டும் முரண்பட்டும் இருக்கும் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள முன்வருவார்கள்? எனவே, இந்தி வெறியில் ஒருவருக்கும் பின்னடையாத வல்லப பந்த், இந்தி வெறியர்கள் செந்தமிழைக் கற்க முனைய வேண்டுமெனக் கூறுவது, தமிழர்களை மயக்கி, இந்தியை அவர்கள் ஏற்கச் செய்யும் வெறும் கண்துடைப்பு வேலையேயாகும்.

# சமூக அமைப்பில் சர்க்கார் தலையிடுகிறதாம்!

## மக்கள் சபைத் தலைவர் மாவலங்கர் ஓலம்!

"இந்தியாவில் இன்றுள்ள அரசாங்கங்கள், சமுதாய அமைப்பு முறைகளிலும், பொருளாதாரத் துறைகளிலும் அதிகமான அளவு தலையிட்டு வருகின்றனர்"

என்று மக்கள் சபைத் தலைவரான ஜி வி. மாவலங்கர் கூறியிருக்கிறுர்.

உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் ஒன்றின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சமுதாய அமைப்புகளைத் தீர்க்கதரிசனமான நோக்குடன் மாற்றியமைக்க முயற்சிப்பது, இப்போதுள்ள சமுதாய அமைப்பு முறையால் நிலவும் ஒழுக்க மனப்பாங்கை சீர்குலையச் செய்யும்.

"இப்போதுள்ள சமுதாய அமைப்பு, நாம் பல நூற்றுண்டுக் காலமாகப் போற்றி வரும் ஒன்ருகும்; அதை மாற்றியமைக்க முயற்சிப்பதற்கு நாம் இன்னும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

'படிப்படியாக வளருதல்' என்னும் நடைமுறை தெரியாததினுல் அவசரப்பட்டு சட்டங்களை இயற்றுகிற பழக்கம் இந்த நாட்டில் இருக்கிறது. இது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டாலுங்கூட பல கஷ்டங்களை உருவாக்கிவிடுகின்றது.

"சமுதாயத்தைச் சீர்படுத்தி அமைக்க வேண்டுமென்று, பொறுமை இல்லாத சட்ட மன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கும்போது இந்த விளைவு இயற்கையானதாக, தவிர்க்கமுடியாததாக ஆகிவிடுகிறது.

# 'குறைந்த அளவு காஷ்மீர் - இந்திய இணைப்பு'க்குக் கண்டனம்

## குலாம் கோரிக்கைக்கு பிரஜா பரிசத் எதிர்ப்பு

ஜம்மு, நவ. 8—

'குறைந்த அளவில் காஷ்மீர் - இந்திய இணைப்பு' இருக்க வேண்டுமென்பது காஷ்மீர் முதல் மந்திரி பக்ஷி குலாமின் விருப்பம். அவர் சேர்ந்துள்ள தேசிய சபையின் கோரிக்கையும் அதுவேயாகும்.

"அதை எதிர்க்கும் வகையில், அங்குள்ள பிரஜா பரிசத் எனும் அரசியல் ஸ்தாபனம், காஷ்மீருக்கும் - இந்தியாவிற்கும், ஒரே கொடி — ஒரே அரசியல் சட்டம் — ஒரே தலைவர் — என்ற கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறது.

அதுபற்றி மேற்படி பரிசத் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், காஷ்மீரின் ஐக்கியத்தைக் காக்க, காஷ்மீர்—இந்திய முழு இணைப்புத் தேவைப்படுகிறது எனவும், இந்தியாவுடன் குறைந்த அளவு இணைப்பினுல் இந்தியாவின் மற்றப் பகுதிகளுடன் காஷ்மீருக்கு இருக்க வேண்டிய தொடர்பில் பலக் குறைவு ஏற்பட இடமுண்டு எனவும், அக்கோரிக்கை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மூட்டி விட்டதாகும் எனவும், கூறப்பட்டிருக்கிறது.

மற்றொரு தீர்மானத்தின் மூலமாக, 16 ஆண்டுகளுக்கு முன்னதாக நடைபெற்ற ஜம்மு நகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறது. 16 ஆண்டுகளுக்கு முன்பு நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுதான், ஜம்மு நகராட்சி நடைபெற்று வருகிறது என்பது, பக்ஷி குலாமின் 'ஜனநாயக' மனப்போக்கிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அதுவுமன்றி மக்களிடை அவருக்குள்ள செல்வாக்கிற்கும் இது ஒரு அத்தாட்சியுமாகும்!

# இந்தி மொழி

"இந்திய அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி இடம் பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் வழிவகைகளையும் நாடு மேற்கொள்ள வேண்டும்"

என இந்திய அரசாங்க கல்வி இலாகா மந்திரி அபுல்கலாம் ஆசாத் 'இந்தி சிக்சா சமிதி' என்ற இந்தி பிரச்சார நிறுவனத்தின் 5-வது கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

அவர் மேலும் சொன்னுர் :—

1961-ம் ஆண்டிற்குள்ளாகவாவது இந்த 'சமிதி' இந்தி நாட்டுக்கு பயன்படக்கூடியதாகச் செய்ய வேண்டும்; இந்தி, ஆங்கில மொழியுடன் கூடவே அதிகமான அளவு உபயோகப்பட முடியும். அப்படி இந்தி வளர்ந்தால்தான் 1955—56-லாவது அரசியல் சட்டம் கூறுகிறபடி, இந்தி, இந்த நாட்டு ஆட்சிபீடத்து மொழியாக முடியும்.

இந்தி மொழி பேசப்படாத பல மாநிலங்களில் இந்தி கட்டாயபாடமாக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் 'இந்தி பிரசார சபை' கடந்த 30 ஆண்டு காலமாக, பெருமைக்குரிய பணியாற்றியுள்ளது. இப்போது பஞ்சாப், அசாம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உடனடியாக இந்தி பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்ருக வேண்டும்."

# எகிப்து பொருளாதார முன்னேற்றம்

## 4 கோடி டாலர் அமெரிக்கா உதவுகிறது!

அமெரிக்காவிடமிருந்து 4-கோடி டாலர் பொருளாதார உதவி பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவுடன் எகிப்து மேற்கொண்டிருக்கிறது.

எகிப்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான 10-ஆண்டுத் திட்டத்தின்கீழ், உதவி பெறும் டாலரைக் கொண்டு சாலை, ரயில் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிகிறது.

அமெரிக்க உதவிக்கான இந்த ஒப்பந்தம், இருநாடுகளிடையேயுமுள்ள நேசத்திற்கு எடுத்துக் காட்டாகும் என்று அமெரிக்கத் தூதுவரான ஜெப்பர்சன் காப்பரி குறிப்பிட்டிருக்கிறுர்.

# 'தாழ்த்தப்பட்டோர்' ஒன்றுபடுகின்றனர்

அகில இந்திய 'தாழ்த்தப்பட்டோர்' கழகத்தின் ஆந்திரப் பகுதிக் கிளை, மத்திய அரசாங்க செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரி ஜெகஜீவன்ராம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாரதீய தாழ்த்தப்பட்டோர் கழகத்துடன் இணைக்கப்பட்டு விட்டதென்று தெரிகிறது.'

இந்த முடிவு இரண்டு கழகங்களின் கூட்டுச் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இணைக்கப்பட்டபின், பெரிதாகியுள்ள இந்தக் கழகத்திற்கான தற்காலிக செயற்குழு ஒன்றும், தோழர் ராஜேஸ்வரராவ், எம். எல். ஏ., அவர்களைத் தலைவராகக் கொண்டு நியமிக்கப்பட்டிருக்கிறது; செயற்குழுவில், 24 பேர்கள் இடம் பெற்றுள்ளனர் என்றும் தெரிகிறது.

# எலி வளையில் செங்கற் சுரங்கம்

பரமக்குடிக்கு அருகில் 3 மைல் தொலைவிலுள்ள வெங்கடக்குறிச்சி எனும் கிராமத்தில், சிலர் காட்டு எலிகள் பிடிப்பதற்காக எலி வளைகளை வெட்டிக்கொண்டிருக்கையில் புதையலொன்று தென்பட்டதாகவும், அப்புதையலிலிருந்து கனமான செங்கல்கள் எடுத்ததாகவும், செங்கற்களின் நீளம் 1 அடியெனவும், அகலம் அரை அடியெனவும் கூறப்படுகிறது.

கடந்த சில தினங்களாகவே அக்கிராம மக்கள் இதுபோன்ற 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட செங்கற்களை வெட்டி எடுத்துள்ளனராம். மேலும் இப்புதையலிலிருந்து 'நாகர் உருவம்' ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

# சிறிய நிலச்சுவான்களுக்கு வரி விதிப்பு இல்லை

## பிரகாசத்தைப் பின்பற்றி பஞ்சாப் முதன்மந்திரி

பஞ்சாப், பெப்சு மாநிலங்களில் உள்ள சிறிய நிலச்சுவான்தார்களுடைய பொருளாதாரக் கஷ்டங்களை நிவர்த்திப்பது அந்த மாநில அரசாங்கங்களுக்குப் பெரிய பிரச்சினையாயுள்ளது. அங்குள்ள அரசியல் கட்சிகளும் இது பற்றி மிகத் தீவிரமாயுள்ளன.

மிகச் சிறிய அளவு நிலமுடைய விவசாயிகளுக்கு அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம், தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றப் போதுமானதாக இல்லை. வேறு இதர வழிகளில் வருமானம் உண்டா என்ருல், அதற்கான வாய்ப்புகள் கிராமங்களில் இருக்கவில்லை.

பஞ்சாப் மாநில அபிவிருத்தி இலாகா மந்திரி எஸ். பிரதாப் சிங் கைரன் என்பவர், அந்த மாநிலத்திலேயே மிகவும் அபிவிருத்தி அடையாத பகுதியான ஹூதியானு மாவட்டத்தில் உள்ள 'சித்வன் பெட்' என்ற இடத்தில் பேசுகையில், "5 ஏகர் நிலத்திற்குக் குறைவாக உடைய விவசாயிகளுக்கெல்லாம் முழுவதுமாக, நில வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது பற்றி சர்க்கார் யோசித்து வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

இந்த விதிவிலக்கு இன்னும் இரண்டாண்டுகளுக்குள் நிகழலாம் என்றும் அவர் கூறியிருக்கிறுர். அவர் மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்து நிறுவ சர்க்கார் முடிவு செய்திருப்பதாயும் அறிவித்தார்.

# ஆண்டவனைப் பற்றிய அச்சம் நாட்டில் இழிவை உண்டாக்கியது!

## ‘தேவைப்படாத அச்சம்’ நீக்கப்பட வேண்டும்

### உலகைப் பிடித்தாட்டும் அச்சம் பற்றி அண்ணாதுரை

“ பொருள் விளங்காத காரணத்தால், நாட்டிலே ‘ அச்சம் ’ என்பது ஏற்படக் கூடாது ; தி. மு. கழகம் சொல்வதெல்லாம், நாட்டிலே மக்களிடையே, ‘ தேவைப்படாத அச்சம் ’ கூடாது என்பதுதான்; ‘தேவைப்படாத அச்சத்தால்’ நாட்டிலே பல இழிநிலைகள் ஏற்பட்டு, ஜாதியின் பெயராலும், இன்னபிற கொடுமைகளாலும் மக்கள் அறிவை இழந்தார்கள்.

“ உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்—வேப்ப மரத்தை நீங்களெல்லோரும் பார்த்திருப்பீர்கள் ; அது, உலகிலே எங்கும் உண்டு ; அந்த வேப்ப மரத்தின் எண்ணெயை எடுத்துச் சோப்பாக்கி, அந்தச் சோப்புடன் துப்பாக்கியையும் அளித்து, ராபர்ட் கிளைவை இங்கே ஆங்கிலேயன் அனுப்பினான் ; நாம் வேப்ப மரத்தைப் பற்றி அறிந்திருப்பதெல்லாம் என்ன ? எப்போதாவது, பேயை ஓட்ட வேப்ப மரத்தின் தழையை ஒடித்திருப்போம் ; அவசரமாக இரயிலுக்குப் போகும்போது, பல் துலக்க அம்மரத்தின் குச்சி ஒன்றை ஒடித்திருப்போம் ; மேல்நாட்டான் அறிவு, ‘ அதன் தைலத்தை எடுக்கலாம்,’ என்று கூறியது ; நம்மவரின் அறிவு மழுங்கிய காரணத்தால், இவற்றுடன் நின்றுவிட்டது ; அச்சத்தை விட்டு அவன் முன்னேறிச் சென்றான் ; நாம் இன்னும் அந்தக் கட்டத்தை விட்டு நகராமல் இருக்கிறோம்,”

—இவ்வாறு, 7—11—54 காலை, சென்னை, கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் ‘ அச்சம் ’ என்னும் தலைப்பில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

“ ‘அச்சம்’ என்பது தேவையற்றதல்ல என்று நான் கூறமாட்டேன்; அது தேவைப்படுவது என்றும் கூறமாட்டேன்; சில நேரங்களில் அது தேவைப்படும்; பல சந்தர்ப்பங்களில், அது, இருக்கக் கூடாத ஒன்றாகும். ‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை,’ என்றார் வள்ளுவர்; ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை என்போம்,’ என்றார் மாணிக்கவாசகர்; ‘அஞ்சி அஞ்சி சாவார்—இவர் அஞ்சாத பொருளில்லை,’ என்றார் பாரதியார்; ஆகவே மனித சமுதாயத்தில், ‘அச்சம்’ தேவைப்படாத ஒன்று என்றோ, அல்லது ‘அச்சம்’ அடியோடு மனிதனை விட்டு நீக்கப்பட்டு விடும் என்றோ கூறுவது இயலாது. இங்கு நாம் பேசுகிறோம்—சர்க்கார் குறிப்பெடுக்கிறார்களே ஏன்—அச்சத்தால்தான்—என்ன பேசுவார்களோ, மக்களிடையே கிளர்ச்சியைத் தூண்டிவிடுவார்களோ—என்ற அச்சத்தால்தான் !

“ பொதுவுடைமை நாடான சோவியத் ரஷ்யாவைக் கண்டு அதற்குப் பல ஆயிரம் மைல் கணுக்கப்பால் உள்ள அமெரிக்கா அச்சப்படுகிறது; அதுபோன்றே அமெரிக்காவைப் பார்த்து ரஷ்யா அச்சப்படுகிறது—தன்னுடைய பொதுவுடைமை முறியடிக்கப்படுமோ என்று அமெரிக்காவைப் பார்த்து ரஷ்யா அச்சப்படுகிறது. அதுபோன்றே, தன்னுடைய முதலாளித்துவ முகாம் முறியடிக்கப்படுமோ என்று அமெரிக்கா அச்சப்படுகிறது ; ஆகவே, ‘ அச்சம் ’ எல்லோரையும் பிடித்தாட்டுகிறதா இல்லையா என்பதல்ல, பிரச்சினை; ‘ அச்சம் ’ ஏன் ஏற்படுகிறது என்பதுதான் பிரச்சினை.

“ காரிருளில் இரவு 12 மணிக்கு, மாற்றார் வீட்டில் நுழையும் திருடனின் உள்ளத்தில் அச்சம் ஏற்படுகிறது ; இரவில் தனியாகச் செல்லும் தர்மலிங்கத்தைப் பார்த்து, ‘ யார் அங்கே ?’ என்று யாராவது திடீரென்று கேட்டால், தர்மலிங்கத்தின் மனதிலே ‘ அச்சம் ’ ஏற்படுகிறது ; வேலியோரத்தில் தன் அன்புக் காதலியிடம் தனித்துப் பேசும் காதலன், வேலிக்கு அப்புறத்தில் தன்னுடைய மாட்டை ஓட்டிச் செல்லும் உழவன் தனது மாட்டைப் பார்த்து, ‘ இரு, இரு ; உன் காலை ஒடித்து விடுகிறேன்,’ என்று கூறினால், தன்னைத்தான் கூறுகிறானோ என்று அக்காதலனின் உள்ளத்திலே ‘ அச்சம் ’ ஏற்படுகிறது ; வேலியோரத்திலே நிற்கும் காதலன் உள்ளம் முதல், ஐ. நா. சபையில் அமர்ந்திருக்கும் நாடுகளின் உள்ளம் வரையில் ‘ அச்சம் ’ குடிகொண்டுதான் இருக்கிறது.”

★

## “எத்தன்” தோன்றிய வரலாறு

“ பொருள் விளங்காத காரணத்தால் அச்சம் ஏற்படுகிறது எனலாம் ; ஆதிகாலத்தில் மனிதன் ஓயாத அலைகளைப் பார்த்தான் ; அதன் சீற்றத்தால் நாடு அழிவதைக் கண்டான் ; கடும் புயல் வீசி பெருமரங்கள் சாய்வதைக் கண்டான் ; இடி இடித்து, அதன் ஓசையால் புற்றுக்குள்ளிருக்கும் நாகமும், புதரில் மறைந்திருக்கும் புலியும் நடுநடுங்கி ஓடியதை அவன் பார்த்தான் ; ஏன் இவைகள் ஏற்படுகின்றன என்று அவனுக்குப் புரியவில்லை ; அது விளங்காத காரணத்தால் அவனுக்கு அச்சம் ஏற்பட்டது ; ‘ ஏன் ’ என்று புரியாமல், அச்சத்துடன் திகைத்து நின்ற அந்த மனிதனின் முன்னே ஒரு எத்தன் நின்றான் ; ‘ அவை என்ன தெரியுமா ? அதுதான் ஆண்டவனின் செயல்,’ என்று அந்த எத்தன் கூறினான் ; அந்த ஆதிமனிதனின் முன்னே நின்ற எத்தன்தான், உலகிலே முதலில் தோன்றிய பார்ப்பனன்—அல்லது புரோகிதன் ; அச்சத்திலே ஏற்பட்டதுதான் ஆண்டவன் தத்துவம்.

“ பொங்கும் அலைகள் பூந்தோட்டத்தை அழிப்பதையும், வீசும் தென்றல் புயலாக வீசி வேதனை தருவதையும் கண்டு, ‘ அது, ஆண்டவன் செயல்,’ என்று அஞ்சிய மனிதன், ஆண்டவனைத் தொழ ஆரம்பித்தான். ‘ ஆண்டவன் இரகசியம் உனக்குத் தெரியுமா ? உனக்குத் தெரியக்கூடாது ; தெரிந்தால், உன் தலை சுக்கல் சுக்கலாக உடையும் ; அது எனக்கு மட்டுமே தெரியவேண்டும்,’ என்று அந்த எத்தன் கூறினான் ; அந்தத் துரோகம் படிப்படியாக வளர்ந்துவிட்டது.

## புராணங்களைப் படிப்பதால் - அறிவுத் தெளிவு ஏற்படுமா?

★

“ அச்சத்தை ஓட்டினால்தான் அறிவுத்தெளிவு ஏற்படும். நாம் இயற்கையின் கோளாறுகளைத் தெரிந்துகொள்ளாததால்தான் நம்மிலே பலரை ‘ அச்சம் ’ பிடித்தாட்டுகிறது ; இந்த அச்சம் ஒழிந்து அறிவுத் தெளிவு ஏற்பட வேண்டும்,

“ அச்சத்தால்தான், நாம் **1,008** தேவதைகளை வானத்திலே நிறுத்தியிருக்கிறோம். முஸ்லிம்களிடம் அப்படியில்லை; ‘மனிதன் எப்படி வாழ்வது ’ என்று அவர்களைக் கேட்டால், ‘ குரானை ’ எடுத்துத் தருகிறார்கள் ; கிறிஸ்துவர்கள், ‘ பைபிளை ’ எடுத்துத் தருகிறார்கள் ; நமக்கு அப்படி முடிகிறதா—இல்லையே! நான்கு வேதம், அறுபத்தெட்டு கலைக்ஞானம், பதினெட்டுப் புராணங்கள் இவைகளையல்லவா தருகிறோம் ? இவைகளை ஒருவன் படித்தால், அவனுக்கு அறிவுத் தெளிவு ஏற்படுமா ? கீழ்ப்பாக்கத்திற்கு அல்லவா அவன் போகுமாறு நேரிடும் ?—இப்போது பலர் போகிறார்களே, கீழ்ப்பாக்கத்திற்கு—அவர்களைச் சொல்லவில்லை—புராணங்களைப் படித்தால் அறிவுத் தெளிவு ஏற்படுமா ?

“ அவைகளைப் படித்தால் பயம் போகும் ; ஒழுக்கம் வளரும் ; சத்தியம் தழைக்கும்—என்கிறார் அன்பர் ஆச்சாரியார் ; அவர், நாணயமான முறையிலே சொல்கிறார் என்று எண்ணுகிறேன். புராணங்களைப் படித்தால் இந்த நல்ல பண்புகள் ஏற்படுமா ?

“ இராமன் ஏக பத்தினிவிரதன் என்று இராமாயணம் சொல்கிறது—எழுதிக்கொள்ளுங்கள் ; கிருஷ்ணன் என்ன செய்தார் ? ராதா—ருக்மணி சமேதராக இருந்தார் ; ராதை, கண்ணனுக்கு அத்தை—அதையும் எழுதிக்கொள்ளுங்கள் ; இராமாயணத்தில் படிக்கிற நீதி, கோபிகா பெண்களுடன் கண்ணன் நடத்தும் லீலைகளால் முறியடிக்கப்படுகிறது—இதையும் எழுதிக் கொள்ளுங்கள்—‘ கண்ணன் காட்டிய வழி ’—என்று !

“ திருடாதே என்று பெரும்பாலான புராணங்கள் சொல்கின்றன—‘திருடித்தான் முக்தியடைந்தனர் கபீர்தாசும், திருமங்கையாழ்வாரும் ’—என்று புராணம் கூறுகிறது ; நாகப்பட்டணத்திலுள்ள புத்தவிகாரத்திலிருந்து தங்கத்தைத் திருடி ஸ்ரீரங்கநாதருக்குத் தங்கக் கலசம் அமைத்தான் என்றும் கூறப்படுகிறது.

“ கொடுத்த பணத்திற்கு சரியாகக் கணக்கு கொடுக்க வேண்டும்—பல புராணங்கள் இப்படிக்கூறுகின்றன ; ஆனால், அரசனுக்கு குதிரை வாங்கக் கொடுத்த பணத்தில், சோமசுந்தரருக்குக் கோவில் கட்ட செலவழிக்கப்பட்டது—என்று அதே புராணம் சொல்கிறது.

“ பிறர் மனைவியின் மீது காதல் கொள்ளாதே—என்று அவைகள் கூறுகின்றன ; ஆனால், மகாவிஷ்ணு பிருந்தைமீது காதல் கொண்டார் ; அவள் எரிக்கப்பட்ட சாம்பலின் மீது விழுந்து புரண்டார் ; இன்றும் அந்த வேகம் தணிய துளசி மாலை அணிந்திருக்கிறார்—என்றுதான் புராணம் சொல்கிறது.

“ இவைகளினால், அறிவுத் தெளிவு ஏற்படுமா ? அச்சம் நீங்குமா ? படித்தால் எந்த நற்பண்பு வளருமென்று அன்பர் ஆச்சாரியார் கூறுகிறாரோ, அந்தப் பண்பு ஏற்படுமா ?

“ நம்மைத் தேடி பணக்காரன் ஒருவன் வந்தால், ‘ காப்பி வேண்டுமா, ஓவல் தேவையா ’ என்கிறோம் ; ஏழை ஒருவன், ‘ கஞ்சி ’ என்று கேட்டு வந்தால், ‘ இல்லை ’ என்கிறோம் ; ஏன் இந்த நிலை ?

“ மனிதன் ஏன் திருடுகிறான் ? முதன் முதலில் திருடும் மனிதன், எவ்வளவு அச்சப்பட்டிருப்பான்—நினைத்துப் பாருங்கள். இல்லாமை காரணமாகத்தானே அவன் திருடுகிறான் ?

“ நாளைக்கு நமது நிலை என்ன ? ‘ இன்றைய நிலைமையே இப்படியென்றால், நாளைக்கு எப்படியாகுமோ ?’—என்று மனிதன் அஞ்சுகிறான். மனிதனுக்கு உண்டாகும் அச்சங்களில், வறுமை மிகப் பெரியது ; அந்த வறுமை போக, ஆளும் சர்க்கார் திட்டங்கள் தீட்ட வேண்டும் ; ‘ தொழிலாளிக்கு நாலணா அதிகம் கூலி கொடு ’ என்று கூறினால், மில் முதலாளி கோபிப்பார்—காங்கிரஸ் மாநாட்டிற்கு ஐம்பதாயிரம் நன்கொடை தர மாட்டார்,’ என்று ஆளும் கட்சியினர் அச்சப்படக் கூடாது.

“ வறுமை என்னும் அச்சம் மனிதனைவிட்டு நீங்கினால்தான் உலகில் இன்பம் தழைக்கும்—என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறினார் ; ‘ Fear of Wants ’ போக வேண்டும் என்றார் ; ‘ வறுமை எனும் அச்சம் ’ மனிதனை விட்டு நீங்கினால்தான் இல்லாமை போகும் ; கல்லாமை நீங்கும் ; அறிவு வளரும் ; இன்பம் பொங்கும்.

“ வறுமை என்னும் அச்சம் நீங்காதவரையில் மனிதன் அஞ்சிச் சாவான் ; அவனுக்கு அறிவுத் தெளிவோ, அல்லது அவன் வாழும் நாட்டில் விஞ்ஞான முன்னேற்றமோ ஏற்படாது.”

## பொருள் - சமூகம் - அரசியல் ஆகிய துறைகளில் முரண்பாடு!

### இராணுவத்துறையில் மட்டும் உடன்பாடு!

இராணுவச் சிறப்புக் குறித்து ரஷ்ய - அமெரிக்க தலைவர்கள் !

★

மார்ஷல் பல்கனின் :

“ இன்றுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப, நாம், நமது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, நமது இராணுவத்தை பலப்படுத்த வேண்டியது அவசியமாகும் சோவியத் இராணுவமும், கப்பற்படையும் நமது அமைதியான வேலைகளுக்குப் பாதுகாப்பாயிருக்கின்றன ;

“ சோவியத் இராணுவம், மிக நவமான ஆயுதங்கள் அத்தனையையும் கொண்டிருக்கிறது. அது எப்போழுதும் தயாராக இருக்கிறது.”

★

ஐசனோவர் :

“ நாம் பலத்த இராணுவம் வைத்துக்கொள்வது நமது சமாதான முயற்சிக்கு முரணானது அல்ல ;

“ பீரங்கிகள், விமானங்கள், டாங்கிகள் இவைகளுக்கு மட்டுமே மதிப்புத் தருபவர்கள் சில பகுதிகளில் ஆதிக்கம் செய்கின்றனர் ;

“ இந்த நிலையில், நாம் வாழ, இந்த ஆயுதங்களும், இராணுவமும் அவசியமாகின்றன.”

---

சென்னை மாநிலத்தில், பாலாறு நதிக்குக் குறுக்கே, பாதைப் பாலமொன்றைக் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது. அப்பாலம், ஆற்காடு—ராணிப்பேட்டை நகரங்களை இணைக்கும். அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு மத்திய சர்க்கார் ரூ. 1[illegible],75,000 அனுமதித்திருக்கின்றனர்.

## பெங்களூர்—சேலம் இரயில் பாதை

சேலத்தையும் பெங்களூரையும் இணைத்து 124 மைல் தூரத்துக்குப் போடப்படும் மீட்டர்கேஜ் ரயில்வே பாதை, அந்த மார்க்கத்தில் போக்குவரத்துக்கு எவ்வளவு தூரம் பயன்படக்கூடும் என்பதை ஆராய்ந்தறிவதற்காக அந்நகர்களுக்கிடையே போக்குவரத்து ‘சர்வே’ ஒன்றை மேற்கொள்ள ரயில்வே போர்டு அனுமதியளித்துள்ளது.

இந்த ‘ சர்வே ’யை தென்பிராந்திய ரயில்வே மேற்கொள்ளும்.

ரயில்வே பாதையின் மார்க்கம் பெங்களூரிலிருந்து — ஹோசூருக்கும், அங்கிருந்து தர்மபுரிக்கும், அங்கிருந்து சேலம்—மேட்டூர் அணை ரயில் மார்க்கத்தில் உள்ள ஓமலூர் வழியாகச் சேலத்துக்கும் செல்லும்.

## கழக மனையில் களவு

2—11—54 இரவு, சிவகாசி அம்மன்கோவில்பட்டி வடபாகம் தி. மு. கழகக் கட்டிடத்தின் உட்புகுந்து அதனுள்ளிருந்த பழைய பேப்பர், கடிதம் எழுதும் நோட்டு புத்தகங்கள் முதலியவை களவாடப் பட்டிருக்கின்றன. இதுபற்றிப் போலீசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

# ஆந்திர மாநில சட்ட சபையைக் கலைத்துவிட கவர்னர் முடிவு?

ஆந்திர சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல்கள் நடத்தப்பட ஆந்திர கவர்னர் திரிவேதி சீக்கிரமாக அறிவிப்பார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

'ராஜ பவனத்'துக்கு நெருங்கிய தொடர்புடைய பலர் இவ் விஷயத்தில் மௌனம் சாதித்தாலும் நிச்சயம் கவர்னர் சட்டசபையைக் கலைத்துவிடுவாரென்றும், பிரகாசம் மந்திரிசபையின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வாரென்றும், அரசியல் சட்டப்படி இனிமேல் எடுத்துக்கொள்ள வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ள கவர்னருக்கு டெல்லியிலிருந்து முழு உத்திரவாதமும் அளிக்கப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

பிரகாசத்தையே மீண்டும் முதலமைச்சராகக் கொண்ட மற்றொரு மாற்று மந்திரிசபை அமைக்கப்படலாம்என்ற கருத்து நம்பதகுந்ததாக இல்லை; சட்டசபையில் நிலையற்ற இத்தனை எதிர்ப்புக் கட்சிகளை வைத்துக்கொண்டு எந்த ஒரு மாற்று மந்திரி சபையையும் அமைப்பதென்பது இயலாததொன்று என்ற கருத்து, பொதுவாக எல்லாரிடமே இருந்து வருவதாகவும் தெரிகிறது.

சட்ட சபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தவேண்டுமென்று தாம் சொல்வதிலிருந்து, ஆந்திர பி-சோ. கட்சித் தலைவர் பி. வி. ஜி. ராஜுவும் மாற்று மந்திரி சபை எதையும் விரும்பவில்லை யென்று தெரிகிறது.

மேலும் ஆந்திராவின் துணை முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியும், மறு தேர்தலையே நடத்தவேண்டுமென்று கோரியுள்ளார்.

ஆனால், பி—சோ. கட்சி உறுப்பினரான என். வி. எல். நரசிம்மராவ், சட்டசபையைக் கலைப்பதை எதிர்த்து, பிரகாசம் தலைமையிலேயே மாற்று மந்திரி சபையொன்று அமைக்கப்பட வேண்டுமென்று கருதுவதாகத்தெரிகிறது.

இப்படிப்பட்ட நிலைகளில் பிரகாசம் தலைமையில் மாற்று மந்திரி சபையொன்று அமைக்கப்படலாமென்பது சாத்தியமற்றதாகி விட்டது.

முதன் முதலாக சட்டசபையைக் கலைத்துவிட வேண்டுமென்று கூறிய மந்திரி சபையும், இப்போது, மாறுபட்டுப் பேச வழியில்லாமலாகி விட்டது.

ஆந்திர கிருஷிகர் லோக் கட்சி, பிரகாசம் தலைமையில் மாற்று மந்திரி சபையொன்று அமைக்கப்பட விரும்பினாலும், தானாகவே அதில் முயற்சி எடுத்துக் கொள்ள முன்வருவதாகவும் தெரியவில்லை. எனவே, பொதுத் தேர்தல் நடத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லையென்று எல்லாக் கட்சிகளுமே கருதுவதாகத் தெரிகிறது.

தங்களுக்கு மந்திரி சபையை அமைக்க அழைப்பு வருமென்று கம்யூனிஸ்டுக் கட்சியினர் உண்மையிலேயே எதிர்பார்க்காமல், கிளர்ச்சிக்கு அதை உபயோகப்படுத்த வேண்டுமென்றே அக் கோரிக்கையை அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அடுத்த பொதுத் தேர்தலுக்கான திட்டங்களைத் தயார் செய்வதில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

# ம. பி. முதன் மந்திரி சுக்லா மீதுள்ள குற்றச்சாட்டுகள்

## விசாரணை செய்ய குழு நியமிக்க வேண்டுமென கோரிக்கை

### ம. சோ. கட்சிகூட்டங்களில் தீர்மானம்

நாகபுரி, நவ. 7—

மத்தியப் பிரதேச முதன் மந்திரி பண்டிட் ரவி சங்கர் சுக்லா மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க, விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென மத்தியப் பிரதேச மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி கோரியுள்ளது.

முதன் மந்திரி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாயும், அரசாங்க உயர்தர அதிகாரிகள் பலர், முதன் மந்திரியினால் கட்டாயப்படுத்தப்பட்டு, அவரது விருப்பத்தின்படி நடந்தார்கள் எனவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

'விசாரணைக் குழு நாள்' கொண்டாட்டத்தின் போது இந்தக் கோரிக்கை பல பொதுக் கூட்டங்களில் தீர்மான ரூபமாக வெளியிடப்பட்டுள்ளது.

# சிந்துவில் புது மந்திரி சபை

சிந்து கவர்னர் மம்தோத்கான், பிர்ஜாதா அப்துஸ் சத்தார் மந்திரி சபையின் நிர்வாகம், ஒழுங்கினமாக இருக்கிறது என்ற காரணத்தால், அதை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு, முன்னாள் முதன் மந்திரி குர்ரோவை, புது மந்திரி சபை அமைக்கக் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க, புதிய மந்திரி சபையின் முதன் மந்திரியாக எம். ஏ. குர்ரோவும், மற்றும் மிர் அலி முகமது ரஷித், ஹாஜி மௌலா பக்ஷும் கவர்னர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்கள். புதிய மந்திரி சபையில் 7 பேர் மட்டுமே இருப்பார்கள்.

"பழைய மந்திரி சபை ஏற்படுத்திய பல புதிய உத்தியோகங்களை ரத்து செய்து, செலவைக் குறைப்பதே என்னுடைய முதல் வேலை," என்று, குர்ரோ தெரிவித்திருக்கிறார்.

பீர்ஜாதா மந்திரி சபை மீது சாட்டப்பட்ட நிர்வாக ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்படும் என்றும், சிந்து மாநிலத்தில் சட்ட அடிப்படையில் நிர்வாகத்தை அமைக்கவும், குடியானவர்களின் நிலைமையைச் சீர்செய்யவும் முயற்சிக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்கு பாகிஸ்தான் முழுவதையும் ஒரே அங்கமாக ஆக்குவதை எதிர்த்ததால் தான் தனது மந்திரிசபை 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டதென்று முன்னாள் முதலமைச்சர் பீர்ஜாதா கூறியிருக்கிறாரென்று தெரிகிறது.

# இராஜஸ்தான் முதல் அமைச்சர் இராஜினமா

இராஜஸ்தான் மந்திரிசபையின் தலைவரான ஜெய்நாராயணன் தனது மந்திரிசபையின் இராஜினமாவை ராஜப்பிரமுகரிடம் கொடுத்திருக்கிறார்.

இராஜஸ்தான் சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக மோகன்லால் சுகாதியா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை ஒட்டியே அவர் இராஜினமாசெய்யுமாறு நேர்ந்தது.

புதிய மந்திரி சபை ஏற்படும் வரை பதவியில் இருக்குமாறு ராஜப் பிரமுகர் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் பதவியில் நீடிக்கிறார். இவர் இனி பத்திரிகையாளராகப் பணியாற்றுவார் என்று தெரிகிறது.

## திருத்தம்

இன்றைய இதழில், 3ம் பக்கம், முதல் கலத்தில், 4-வது பாரா, 9, 10-வது வரிகளில், 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்றிருப்பதை, 'நாமார்க்கும் குடியல்லோம் நமனுக்கு அஞ்சோம்' என்று திருத்தி வாசித்துக் கொள்ளும்படி, வாசக நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம். (ஆ—ர்.)

# கழகக் கூட்டங்கள்

★

**பம்பாய்**

மாதுங்கா தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

நப்பூ கார்டனில்

**12-11-54** இரவு **7** மணிக்கு

தலைவர்: பொன். தி. ர. சபாபதி

வரவேற்பாளர்:

நோ. து. அன்புச்செழியன்

கொடியேற்றுபவர்:

சு. வள்ளிநாயகம்

பேசுபவர்:

எம். எஸ். இராமசாமி

★

**பம்பாய்**

தி. மு. கழக ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா

தாராவி வ. உ. சி. திடலில்

**13-11-54** மாலை **6-30** மணிக்கு

தலைவர்: எஸ். தியாகராசன்

வரவேற்புரை: இரா. வளர்மதி

கொடியேற்றுபவர்:

பி. எஸ். செல்லையா

பேசுபவர்:

எம். எஸ். இராமசாமி

* * *

**14-11-54** மாலை **6-30** மணிக்கு

தலைவர்:

இரா. மா. சண்முகராசன்

பேசுவோர்:

எம். எஸ். இராமசாமி

சு. வள்ளிநாயகம்

உ. அ. செல்லையா

# காங்கிரஸ் தலைவர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்படுவாராம்.

1948-ல் கத்தியவார் சமஸ்தானங்கள் இணைக்கப்பட்டு, சௌராஷ்டிர மாநில யூனியன் அமைக்கப்பட்டதிலிருந்து அங்கு முதன் மந்திரியாயிருந்து பணியாற்றுபவர்.

இப்போது சௌராஷ்டிர மாநிலத்தில் ஹாலர் மாவட்டமாக இருக்கும் முன்னாள் ஜாம்நகர் சமஸ்தானத்தில் தேபார் பிறந்தவர். அவருக்கு இப்போது வயது 48.

அவர் எப்பொழுதும் அகில இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவில்கூட அங்கத்தினராயிருந்தவரல்லர்.

ராஜ்கோட்டில், ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தேவை என்பதற்காக நடைபெற்ற அறப்போரில் பங்கு பெற்றவர். கத்தியவார் அரசியல் மாநாட்டின் செயலாளராயிருந்தவர்.

தோழர் தேபார் ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்குவது நிச்சயம் எனத் தெரிகிறது.

## தஞ்சை மாவட்டக் கழகம்

### தலைவராக குன்னியூரார் தேர்வு

தஞ்சாவூர், நவ. 8—

தஞ்சாவூர் மாவட்டக் கழகத் தலைவராக, அங்குள்ள பெருநிலப் பிரபுவான குன்னியூர் சாம்பசிவ அய்யர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நகரசபையின் 52 உறுப்பினர்களில் 51 பேர் வருகை தந்து நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில், அவருடைய பெயரை பிரேரேபித்ததும், வேறு எவரும் போட்டிக்கு வரவில்லையாதலால், எதிர்ப்புகளில்லாமலேயே அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!

முன்னாள் மாவட்டக் கழகத் தேர்தலின்போது காலஞ் சென்ற நாடிமுத்துப் பிள்ளையவர்கள் போட்டியிட்டபோது, குன்னியூர் சாம்பசிவஅய்யர் அவரை எதிர்த்து நின்று தோல்வியுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது, தஞ்சாவூர் மாவட்டக் காங்கிரஸ் தலைவராக குன்னியூரார் வீற்றிருக்கிறார்.

# பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு கோபி நகரசபை வரவேற்பு

**4—11—54** மாலை 4 மணிக்கு தலைவர் ஜி. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற, கோபி நகர்சபையின் விசேட கூட்டத்தில், 15—11—54-ல், கோபியில் நடைபெறும் விவசாயிகள் மாநாட்டுக்குத் தலைமை தாங்க இருக்கும் தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கும், மாநாட்டை ஆரம்பித்து வைக்கவிருக்கும் டி. செங்கல்வராயன் அவர்களுக்கும், நகரசபை சார்பில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிப்பதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# சென்னையில் அண்ணா

சென்னை 9-வது வட்டம் தோழமைக் கழகத்தின் சார்பில், ஆனைக்காரகோனன் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இலங்கைத் தோழர் இராசன் தலைமை தாங்கினார். தோழர் நாகூர் அனீபா கழகப் பண் பாடியதும், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் இன்றுள்ள அரசியல் நிலைகுறித்து விளக்கவுரையாற்றினர்

அடுத்து தோழியர் ஜி. கஸ்தூரி கழகப் பாடல் பாடியதும், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசினார்கள்.

இறுதியாக, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அரியதோர் சொற்பெருக்காற்றினார்.

அண்ணா அவர்களுக்கு பல மன்றங்கள், கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டதுடன், வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

கூட்டம் நடைபெற்ற இடம் மிக நெருக்கடியான வீதியாக இருந்தபோதிலும், பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்வம் ததும்ப கூடி நின்று பொதுச் செயலாளரின் கருத்துக்களைக் கேட்டுப் பூரித்தனர்.

கூட்டம் குறித்த நேரத்தில் துவக்க முடியாத வகையில், மின்சார வினியோகம் இல்லாது போயிற்று.

பின்பு, தோழமைக் கழகத்தவரின் பெருமுயற்சியால் அருகிலிருந்த இல்லமொன்றிலிருந்து மின்சாரம் எடுத்து ஒலி, ஒளி ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இடையூறுகளுக்கிடையில் கூட்டம் வெற்றிகரமாக இனிது நடைபெற்றது. தோழமைக் கழகத்தினர் தம் பெரும்பணியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாயிருந்தது.

# செங்கற்பட்டு:

செங்கற்பட்டு தி. மு. கழகச் சார்பில் 6—11—54 மாலை, தர்க்கா திடலில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வகாப் தலைமை தாங்கினார். தோழர் இமயவரம்பன் பேசியதும், அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், 'டால்மியாபுரம்' கல்லக்குடியாக ஆக்கப்படவேண்டுமென்று தி. மு. கழகம் ஏன் போராட்டம் நடத்தியது என்பது குறித்து விளக்கிப் பேசினார்.

பின்னர், தோழர் காஞ்சி க. வே. முருகேசன் கழகப் பண் இசைத்தார்.

அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், "திராவிடர் சமுதாயம் திருந்த வேண்டிய அவசியம் கருதித்தான் கடந்த 30 ஆண்டு காலமாக சுயமரியாதை பிரசாரம் நாட்டில் நடைபெற்று வருகிறது," என்று விளக்கினார்.

இறுதியாகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், நாட்டில் நிலவும் அரசியல் நிலை குறித்தும், தி. மு. கழகத்தின் சமூக பொருளாதார, அரசியல் லட்சியங்கள் குறித்தும் நீண்டதோர் விரிவுரையாற்றினார்.

இறுதியாக தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தெல்லாம் வந்து கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந. த. நி.)

# சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம்

6—11—54 மாலை 7 மணிக்கு, சென்னை இராயபுரம் 'அறிவகத்'தில் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றபோது கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன:—

நுங்கம்பாக்கம் தி. மு. கழகச் செயல் வீரர் 'பழமநீ' மறைவு குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

பொதுப் பணியாளரும் முன்னாள் சென்னை மேயருமான தாதுலிங்கனார் அவர்களின் மறைவு குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை மாநாட்டு வரவு—செலவு விவரங்களை படித்து (வரவு ரூ. 7705—6—6 செலவு ரூ. 7705—6—6) நீண்ட நேர பரிசீலனைக்குப் பிறகு ஒப்புக் கொள்ளப்பட்டது.

அடுத்த திராவிடர் திருநாள் விழாவை சென்னையில் மிகச் சிறப்பாக நடத்துவதற்கு தோழர்கள் புரட்சிமணி, வெற்றிவீரன், ஏ. ஆர். சேஷாசலம், சானகிராமன், ஏகாம்பரம் ஆகிய ஐவரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, திருநாள் சிறப்புற நடத்துவதற்கான வழிவகைகளை அமைத்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டது,

திராவிடர் திருநாளன்று சென்னையைச் சார்ந்த எல்லா கிளைக் கழகங்களும், அந்தந்த வட்டங்களில், திராவிடர் திருநாளை ஊர்வலத்தின் மூலம் சிறப்பிக்க வேண்டுமென்றும், ஊர்வலத்தின் போது உண்டியல் வசூலித்து மாவட்டத்தின் சார்பில் நடக்கும் திராவிடர் திருநாள் விழாச் செலவிற்கு தரவேண்டுமென்றும், அதிகப்படியாக வசூலிக்கும் கழகத்திற்கு அவர்கள் வசூலித்த தொகையையே பரிசாக அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## திருவண்ணாமலையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

திருவண்ணாமலை தி. மு. கழகச் சார்பில் 7—11—54 ஞாயிறன்று மாலை, தோழர் கலீல் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தி. மு. கழகத்தின் சமூக சீர்திருத்த நோக்கம் குறித்துப் பேசியதும். தோழர் முகவை. ஆர். எஸ். பாண்டியன் தி. மு. கழகத்தின் 'திராவிடநாடுதிராவிடர்க்கே' என்ற லட்சியத்திற்கான விளக்கம் தந்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன், கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. த. நி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.